DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI

| | | |
|---|---|---|
| STC.NO.197/2020 | Crime No.: | Police Station : |
| PW :1 | C.MP. | DVC : |

| | | | |
|---|---|---|---|
| Name | **கணேசன்** | Caste | |
| Father Name | **ராஜகோபால்** | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | 60 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 187301 the day of | | | 02.12.2022 |

**முதல் விசாரணை-**

நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது முதல் விசாரணைக்கான சங்கதிகளை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் என்ன கூறியுள்ளது என்று எனக்கு தெரியும். இவ்வழக்கின் அசல் ஆவணங்களை எதிரியின் மீது மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள சிவில் வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். அந்த வழக்கு தற்போது மாண்புமிகு பவானி நான்காவது கூடுதல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.17/2018 என்கிற எண்ணில் நிலுவையில் உள்ளது. எனவே, மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து பெற்ற மேற்படி அசல் ஆவணங்களின் சான்றிட்ட நகல்களை குறியீடு செய்கிறேன். 23.03.2018 ம் தேதியிட்ட கனரா வங்கி, பவானி கிளை, ரூ.10,00,000/-த்திற்கான காசோலை எண்.172850 சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1**, 26.03.2018 ம் தேதியிட்ட கனரா வங்கி, பவானி கிளையில் வழங்கிய ரிட்டன் மெமொவின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.2**, 09.04.2018 ம் தேதியிட்ட புகார்தாரர் தனது வழக்கறிஞர் மூலம் எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகலின் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.3,** 10.04.2018 ம் தேதியிட்ட மேற்படி அறிவிப்பை எதிரி பெற்று கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டையின் சான்றிட்ட நகல் அசல் **ம.சா.ஆ.4.** (மேற்படி ஆவணங்களின் அசல் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்கிற எதிரி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்பட்டுள்ளது). புகாரில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.